வாசிக்க: 1 யோவான் 1:7-10; 3:1-9

***"குளித்துவிட்டவன் தனது காலடிகளை மட்டும் கழுவினால் போதும்; மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" (யோ 13:10)***

பாதம் கழுவிய காட்சியில் இயேசு பயன்படுத்திய பழமொழி இது. குளித்தலுக்கும் கழுவுதலுக்குமுள்ள வேறுபாட்டை இயேசு தமது சீடருக்குப் போதிக்க விரும்பினார். அவர்கள் மறுபடியும் குளிக்க அவசியமில்லை என்றார் அவர். அவர்களுக்குத் தேவை யானது காலடிகளைக் கழுவுவது மட்டுமே. நீதிமானாக்கப்படுதலுக்கும் பரிசுத்த மாக்கப்படுதலுக்குமுள்ள வேறுபாட்டை இச்செயல் சித்தரிக்கிறது.

நீதிமானாக்கப்படுதல் குளிப்பதற்குச் சமானம். அது இயேசுவின் இரத்தத்தால் ஒரு நொடிப்பொழுதில் நடந்தேறுவதாகும். அது முழுமையானது. இந்தச் சுத்திகரிப்பு பாவிகளை உடனடியாகப் பரிசுத்தவான்களாய் மாற்றுகிறது. "குளித்துவிட்டவன் **முழுவதும்** சுத்தமாயிருக்கிறான்!"

கடவுளிடமிருக்கும் கணக்குப்படி அவனது பெயரில் பாவம் எதுவுமே கிடையாது. கடவுளின் அன்பின் *ஆழம்* இயேசுவை ஏற்றுக்கொண்டவனது பாவங்களைக் கடலின் ஆழத்தில் அமிழ்த்திற்று (மீகா 7:19); அதின் *அகலம்* அவற்றைக் கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள தூரமாய்த் துரத்திற்று (சங் 103:12); அதின் *நீளம்* அவற்றைக் கடவுளின் முதுகிற்குப் பின்னால் தூக்கியெறிந்தது (ஏசா 38:17); அதின் *உயரம்* அவற்றை மேகங்களைப்போல் அகற்றிவிட்டது (ஏசா 44:22).

நாம் நீதிமான்களாக்கப்பட்டபின் அல்லது மறுபடி பிறந்தபின், நமது அனுதின "நடையின்போது" நமது "பாதங்களில்" தூசு படிவதற்கு வாய்ப்புண்டு. நாம் இனிப் பன்றிகளல்ல, ஆடுகளானதால் நாமாகவே விரும்பிச் சாக்கடைக்குள் இறங்க மாட்டோம். கடவுளின் வித்து நமக்குள் ஊன்றப்பட்டுவிட்டதால், நாம் விருப்பமாக, வழக்கமாகப் பாவம்செய்ய முடியாது (1 யோ 3:9). காலடிகளில் தூசிபடாமல் பாவக் கறை படிந்த இம்மண்ணில் நடந்தது இயேசு ஒருவரே. நமக்கோ பாவமில்லை என்று நாம் சொன்னால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுகிறோம். இயேசுவின் இரத்தத் தால் நமது காலடிகள் தினமும் கழுவப்படவேண்டும்.

அநேகக் கிறிஸ்தவர்களைப்போலப் பேதுருவும் ஓரங்களுக்குச் சென்றுவிடுபவன். ஒன்று "இரட்சிக்கப்பட்டுவிட்டால் எப்பொழுதுமே பாதுகாப்புதான்" எனக் கூவிக் கொண்டு அடிக்கடி தற்பரிசோதனை செய்து கழுவப்படாமல் ஏனோதானோவென்று வாழுவர். இல்லையேல், ஒவ்வொரு முறை பாவத்தில் தவறிவிழும்போதும் குற்ற வுணர்வுடன் சுற்றிச்சுற்றி வந்து, தங்களது இரட்சிப்பை இழந்துவிட்டதுபோல் "மறுபடியும்" மறுபடி பிறக்கவேண்டுமென்று பிரார்த்திப்பர். "இனி குளிக்கவேண்டிய தில்லை, கழுவினால் போதும்" என்று இயேசு அழகாய்ச் சொன்னாரே! நீதி மானாக்கப்படுதல் திரும்பத்திரும்ப அல்ல, ஒரே தரம் நடைபெறுவது; பரிசுத்த மாக்கப்படுதலோ நொடிதோறும் நடந்துகொண்டிருந்து முடிவாக கிறிஸ்துவின் மறுவருகையின்போதுதான் நிறைவடைவதாகும்.

*நான் உம் சொந்தம்; நித்தமாய் தாசனை நீர் சுகமாய்*
*தங்கச் செய்து, மேய்ப்பரே, காத்தும் மேய்த்தும் வாருமே!*
*நான் உம் சொந்தம்; தேவரீர் வழி காட்டிப் போதிப்பீர்;*
*பாவம் நீங்கக் கழுவும், ஆயுள் முற்றும் நடத்தும்! (பாமாலை)*
*— Mrs. M.F. Maude, 1819-1913*